# அவசரக் கூட்டம்

**அன்புடையீர்**

வணக்கம். பல்லடம் நகராட்சி நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் வருகிற 12.05.2025 திங்கள்கிழமை அன்று மதியம் 12.00 மணியளவில் நகர்மன்ற தலைவர் திருமதி.கவிதாமணிராஜேந்திரகுமார்,B.B.M., அவர்களின் தலைமையில் கீழ்க்கண்ட பொருட்களை பரிசீலித்து நகர்மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது. அவ்வமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பொருள் : 01**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 முதல் 18 வரை உள்ள பொதுமக்களுக்கு தினந்தோறும் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு நகராட்சிக்கு சொந்தமான 109 எண்ணிக்கையிலான ஆழ்துளைக்கிணறு மற்றும் 13 எண்ணிக்கையிலான திறந்தவெளி கிணறுகள் மூலம் விநியோகம் செய்வதற்கு நகராட்சியின் பொறியியல் பிரிவில் குடிநீர் சம்பந்தமான நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் (திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி விலை விகிதப் பட்டியல்படி) பணியாளர்களை நியமனம் செய்து (Out Sourcing) மேற்கண்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே மேற்கண்ட பணிக்கு வழங்கப்பட்டிருந்த பணி உத்திரவு 31.12.2024 உடன் முடிவடைய உள்ளதால் மேற்கண்ட குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவேண்டியுள்ளது. எனவே மேற்காணும் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு 31.05.2025 வரை ஒப்பந்த அடிப்படையில் Out Sourcing மூலம் பணிகளை ரூ.14.50 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம்**

**பொருளில் பணி உத்தரவு நாள் 31.12.2024 என தவறுதலாக உள்ளது. 12.07.2025 எனவும் மற்றும் 31.05.2025 என தவறுதலாக உள்ளதை 31.12.2025 எனவும் திருத்தி வாசிக்கப்பட்டது. 04வது வார்டு உறுப்பினர் மட்டும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார் மற்ற நகர்மன்ற உறுப்பினர் அனைவராலும் ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,**

**பொருள் : 02**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 முதல் 18 வரை உள்ள பொதுமக்களுக்கு தினந்தோறும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து பெறப்படும் குடிநீர் அண்ணாநகர், CTC காலனி, மேற்கு பல்லடம், வடுகபாளையம்–I, வடுகபாளையம்–II பனப்பாளையம், ராயர்பாளையம், BDO காலனி, SAP நகர், NSP நகர், கல்லம்பளையம், சேடபாளையம், நாரணாபுரம் ஆகிய 13 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யவும், கேட்வால்வு 405 எண்ணிக்கை மற்றும் Sluice Valve 40 எண்ணிக்கை வால்வுகள் ஆகியவற்றை தினசரி பயன்படுத்தி குடிநீரை சீரான முறையில் பிரித்து வழங்குவதற்கும், நகராட்சியின் பொறியியல் பிரிவில் குடிநீர் சம்பந்தமான நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் (திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி விலை விகிதப் பட்டியல்படி) பணியாளர்களை நியமனம் செய்து (Out Sourcing) மேற்கண்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே மேற்கண்ட பணிக்கு வழங்கப்பட்டிருந்த பணி உத்திரவு 31.12.2024 உடன் முடிவடைய உள்ளதால் மேற்கண்ட குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவேண்டியுள்ளது. எனவே மேற்காணும் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு 31.05.2025 வரை ஒப்பந்த அடிப்படையில் Out Sourcing மூலம் பணிகளை ரூ.14.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம்**

**பொருளில் பணி உத்தரவு நாள் 31.12.2024 என தவறுதலாக உள்ளது. 12.07.2025 எனவும் மற்றும் 31.05.2025 என தவறுதலாக உள்ளதை 31.12.2025 எனவும் திருத்தி வாசிக்கப்பட்டது. 04வது வார்டு உறுப்பினர் மட்டும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார் மற்ற நகர்மன்ற உறுப்பினர் அனைவராலும் ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,**

**பொருள் :03**

பல்லடம் நகராட்சியில் பொறியியல் பிரிவின் மூலம் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம், 15வது நிதிக் குழு திட்டம், தூய்மை பாரத இந்தியா, மாநிலங்களுக்கான மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவி திட்டம், சிறப்பு நிதி, தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உள்கட்டமைப்புத் திட்டம் மற்றும் நகராட்சிப் பொது நிதி போன்ற பல்வேறு விதமான திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சியில் பணி ஆய்வாளர் பணியிடம் காலியாக உள்ளதால், மேற்கண்ட பணிப் பொறுப்புகளை உடனருந்து கவனித்துக் கொள்ள யாரும் இல்லை.

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் போன்ற அலுவலகங்களுக்கு அடிக்கடி திட்டப் பிரேரணைகள், மதிப்பீடுகள், பணி முடிவு அறிக்கை மற்றும் பணிகள் தொடர்பான விபரங்களை நேரடியாக சென்று சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் அனைத்தையும் மேற்கொள்ளும் போது பணி மேற்பார்வையாளரால் பணிகள் மேற்கொள்வதில் கால தாமதம் ஏற்படுவதுடன் பணிகளும் சுணக்கம் ஏற்படுகிறது. எனவே, பல்லடம் நகராட்சியில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் உடனடியாக கால தாமதமின்றி நிறைவேற்றுவதற்கு ஏதுவாக இரு தொழில் நுட்ப பணியாளர்களை (தமிழ்நாடு அரசு பொதுபணித்துறை தரப்படுத்தப்பட்ட விலை விகிதப் பட்டியல் படி) கொண்டு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் : 04**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 முதல் 09 வரை உள்ள பகுதிகளில் புதியதாக வீட்டு குடிநீர் குழாய்கள் அமைக்கப்படும்பொழுதும், குடிநீர் மற்றும் குடிநீர் அல்லாத குழாய்களில் ஏற்பட்ட உடைப்புகளை சரி செய்யு பொழுதும் சாலைகளில் பழுது ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. எனவே, சாலைகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்து (பேட்ச்) பராமரிக்கும் பணி மேற்கொள்ள ரூ.9.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் : 05**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:06 கரையான்புதூர் மாரியம்மன் கோவில் பின்புறம் உள்ள வீதி மற்றும் கரையான்புதூர் திருப்பூர் சாலை சந்திப்பு பகுதியில் உள்ள தார் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி தார் சாலை புதுப்பித்தல் மற்றும் வேகத்தடைகளுக்கு Paint marking பணிகள் மேற்கொள்ள ரூ.11.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மாணம்**

**04வது வார்டு உறுப்பினர் மட்டும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார் மற்ற நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மாணம் நிறைவேற்றப்பட்டது.**

**பொருள் : 06**

பல்லடம் நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம் 2.0 2025–26 ன் கீழ் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கழிவுநீரை கொண்டு செல்ல பட்டேல் வீதியில் தார் சாலையின் ஓரத்தில் சாலை வெட்டப்பட்டு குழாய்கள் பதிக்கப்பட்டது.இதனால் அப்பகுதியில் தார் சாலை பழுதடைந்துள்ளதால் வாகனங்கள் செல்லவும், பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளது. எனவே, பட்டேல் வீதியில் பேட்ச் பணிகள் மேற்கொள்ள ரூ.7.50 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் : 07**

இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மான எண். 240 நாள்:24.09.2023 ன் படியும், ந.க.எண்.943/2023 நாள். 29.09.2023 – இன்படியும், பல்லடம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் ஒழிப்புபணிகள், கொசுப்புழு ஒழிப்பு பணிகள் போன்ற பணிகளுக்கு 50 களப்பணியாளர்கள் நியமித்து கடந்த 01.10.2023 முதல் தற்போது வரை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.943/2023/எச்1 நாள். 10.03.2025– இன்படி கொசு ஒழிப்பு பணியினை மூன்று மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டது.

மேற்படி, மூன்று மாத கால தற்காலிக காலநீட்டிப்பானது 11.06.2025 உடன் முடிவடைந்ததாலும், நோய் தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதியும் பொதுமக்களை கொசுக்களினால் ஏற்படக்கூடிய தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒப்பந்த விதிகளின்படி மேலும் மூன்று மாத காலத்திற்கு 12.06.2025 முதல் 11.09.2025 வரை காலநீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கவும்,அதற்காகும் செலவினத்தொகை ரூ.25.00 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 943/2023/எச்1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

.

**பொருள் :08**

பல்லடம் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணியினை தனியார் முகமை மூலம் மூன்று ஆண்டுகளுக்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண்:33552/2022/EA2–SWM–12 நாள்.10.01.2023–இல் அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, திடக்கழிவு மேலாண்மை பணியினை தனியார் முகமை மூலம் மேற்கொள்ள 23.05.2023 –இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Saram Enviro Services Private Ltd, நிறுவனத்தால் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டு 16.06.2023 முதல் 15.06.2024 வரை ஓராண்டு காலத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. நகர்மன்றத்தீர்மானம் எண்.83 நாள். 27.06.2024 மற்றும் நகர்மன்றத் தீர்மானம் எண் 237 நாள்:10.09.2024–இன் படி, திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் முகமை மூலம் மேலும் ஓராண்டிற்கு மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 1615/2022/எச்1 நாள். 13.06.2024 மற்றும் ந.க.எண். 1615/2022/எச்1 நாள்:11.09.2024 – இன்படி மேலும் ஓராண்டு காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இரண்டாவது ஓராண்டு கால நீட்டிப்பானது 15.06.2025 உடன் முடிவடைவதாலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்த நடைமுறைகளின்படியும், ஒப்பந்தப்புள்ளி ஆவணம் 9.3 C–இன்படி 10 % Hike உடன் (1 டன் 6215+10% Hike = 6215+621=6836). மேலும் ஓராண்டு காலத்திற்கு (16.06.2025 முதல் 15.06.2026 வரை) காலநீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கவும், அதற்காகும் செலவினம் ரூ.380.46 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் :09**

பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளில் உள்ள வரிவிதிப்புதாரர்கள் 2025–26 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய முதலாம் ஆண்டிற்கான சொத்துவரியை 31.04.2025ம் தேதிக்குள்ளும், இரண்டாம் ஆண்டிற்கான சொத்துவரியை 31.10.2025ம் தேதிக்குள்ளும் செலுத்துபவர்களுக்கு 5% சதவீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

எனவே, பல்லடம் நகராட்சி எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், இந்நகராட்சியின் அனைத்து வார்டு பகுதிகளிலும் ஒலிபெருக்கி மூலம் 5% சதவீதம் ஊக்கத்தொகை வழங்குவது குறித்தான அறிவிப்பினை ஆட்டோ மூலம் தினசரி விளம்பரம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தி சொத்துவரி வசூலினை உயர்த்திட, ஏதுவாக ஏற்கனவே 2024–25ம் ஆண்டிற்கு விளம்பரம் செய்ய 10.02.2025ம் தேதியில் பெறப்பட்டுள்ள விலைப்புள்ளிற்கு நகர் மன்றம் தீர்மான எண்.41, நாள்.28.02.2025ல் மன்றம் அனுமதிக்கப்பட்டுள்ளதால், அதே விலை விகிதத்தில் 21.04.2025 முதல் 31.04.2025 வரையில் 10 நாட்கள் விளம்பரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.35,000/–யை வழங்கிட மன்றத்தில் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.881/2025/அ1)

<u>அலுவலக குறிப்பு :–</u>

அவசர அவசியம் கருதி பொதுமக்கள் அறியும் வகையில் ஆட்டோ விளம்பரம் செய்தமைக்கும், பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 10

பார்வை : 1. G.O. (Ms.) No:01, Social Welfare and Women Rights Department, dated: 13.01.2023

2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்: 17404/2022/M1 நாள் : 02.05.2025

****

பார்வை(1)ல் காணும் அரசாணையின் படியும், ந.க.எண்:1111/2023/இ1 நாள்:24.05.2023–இன் படியும், பல்லடம் நகராட்சி பகுதியில் அனைத்து நகராட்சி தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 1 முதல் 5 வகுப்பு வரையிலான மாணவ, மாணவிகளுக்கும் முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் கீழ் காலை உணவு தரமாக தயாரித்து வழங்கிட ஏதுவாக, நகராட்சி நிர்வாக இயக்குநரக வழிகாட்டுதலின்படியான மாநில ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளின் படி இந்நகராட்சியில் 19.05.2023 ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நெறிமுறைகளின்படி M/s. No food waste, Door No: 5/1, Saravana Thottam Road, Kannampalayam, Sulur, Coimbatore – 641402 என்ற நிறுவனம் மூலம் பல்லடம் நகராட்சி 9 பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. பார்வை(2)ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி நகராட்சி பகுதியில் ஏற்கனவே காலை உணவு வழங்கப்படும் 9 பள்ளிகள் உடன் கூடுதலாக அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆன டி.இ.எல்.சி துவக்கப்பள்ளி, பல்லடம் கிழக்கு மற்றும் டி.இ.எல்.சி துவக்கப்பள்ளி, நாரணாபுரம் ஆகிய இரண்டு பள்ளி மாணவர்களையும் இத்திட்டத்தில் சேர்த்து உணவு வழங்கிடவும் அதற்காகும் செலவினத் தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 1111/2023/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 11

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 14 கொசவம்பாளையம் ரோடு பொதுக்கழிப்பிடம் அருகில் உள்ள ஆழ்துளை கிணறு முதல் சின்னையா கார்டன் ரோடு வரை குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கான பயன்படுத்தப்படும் தண்ணீர் இல்லாத காரணத்தால் அப்பகுதி பொதுமக்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது.எனவே, அப்பகுதிக்கு புதியதாக குழாய் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்ய ரூ.1.30 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது**

**நகர்மன்றத் தலைவர்**
**பல்லடம் நகராட்சி**